# சிறைச்சாலை திணைக்களத்திற்கு தொழிலாளர் / காவற்காரர் பதவிகளுக்கு ஆட்சேர்த்தல் - 2026

**சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவும் தொழிலாளர் / காவற்காரர் பதவிகளை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

01. **தகைமைகள்:**

i. **கல்வித் தகைமை :** க.பொ.த (சா.தரம்) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தபட்சம் இரண்டு (02) திறமைச் சித்திகள் சகிதம் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

ii. **ஏனைய தகைமைகள்:**

- சிறந்த நடத்தையுடையவராக இருக்க வேண்டும் என்பதுடன் நற்பெயருக்கான களங்கம் இயைபான குற்றம் தொடர்பில் எந்தவொரு நீதிமன்றத்தினாலும் குற்றவாளியாக்கப்பட்டவர் இந்த பதவிக்கான நியமனத்திற்கு முழுமையாக தகுதியற்றவராவார்.
- இலங்கைப் பிரஜையாகவிருக்க வேண்டும்.

iii. **வயது :** விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளில் அதாவது 2026-04-20ஆம் திகதியில் 18 வயதிற்குக் குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.

02. **சம்பள முறை :** 10/2025 மற்றும் 2025-03-25ஆம் திகதிய அரச நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், தொழிலாளர் / காவற்காரர் பதவிகளுக்குரித்தான மாதாந்த சம்பள அளவு PL - 2025 - ரூபா 40,000 - 10x450 - 10x490 x 10x540 - 12x590 - 61,880.00 ஆகும்.

03. **ஆட்சேர்க்கப்படும் முறை :** கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் திறமை அடிப்படையில் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபேட்சகர்கள் நிலவும் வெற்றிடங்களுக்கு நியமிக்கப்படுவர்.

04. **ஆட்சேர்க்கப்படும் தரம் :** தரம் III

05. கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின்போது புள்ளிகள் வழங்கும் நடைமுறை பின்வருமாறாகும்

| மூலப் பிரமாணம் | புள்ளிகள் |
|---|---|
| கல்வித் தகைமை | 25 |
| பொறிமுறை மற்றும் தொழில்சார்ந்த திறமை | 35 |
| விளையாட்டு | 15 |
| நடத்தை மேம்பாடு மற்றும் தகைமைத்துவம் | 15 |
| நேர்முகத் தேர்விற்கு முகங்கொடுத்தல் | 10 |
| **மொத்தம்** | **100** |

**குறிப்பு :** பதவிகளுக்காக பெற்றுள்ள அனுபவம், கல்வித் தகைமைகள் மற்றும் வெளிவாரியான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ் மூலம் உறுதி செய்ய வேண்டும். அந்த தகைமைகள் விண்ணப்பம் கோரப்படும் இறுதிநாளில் செல்லுபடியாதல் வேண்டும்.

06. நிர்ணயிக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு அமைவாக அல்லாத மற்றும் சரியாக நிரப்பப்படாத முழுமையற்ற தன்மையில் காணப்படும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். முறையாக விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்யாமையால் ஏற்படும் இழப்பை விண்ணப்பதாரர் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

07. விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொழிலாளர் / காவற்காரர் பதவிகளுக்காக ஆட்சேர்த்தல்'' எனக் குறிப்பிட்டு 2026-04-20ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ''சிறைச்சாலை ஆணையாளர் நாயகம், சிறைச்சாலைகள் தலைமையகம், இல. 150, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

**எச்.எம்.என்.சீ. தனசிங்க,**
**சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் (பதில்),**
**சிறைச்சாலைகள் தலைமையகம், கொழும்பு 09.**
**2026-03-............**